







# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : ஶ்ரீ ப ரா வி

மலர் 1 இதழ் 2 8.01.2025



ஸ்ரீமதே ஸ்ரீ வராஹமஹாதேசிகாய நம:

## உள்ளே...............

1. பெருமாளின் தயை-பொறுமை
2. அஹங்காரம், மமகாரம் உள்ளவனாக இருத்தல் கூடாது
3. ஆசார்ய மஹிமை- 35ம் பட்டம் அழகியசிங்கர்
4. புருஷஸூக்தம்- ஸ்ருஷ்டி
5. பெருமாள் பிரசாதம்

*****

நம்மாழ்வாரும் பாஷ்யக்காரரும்



# பெருமாளின் தயை-பொறுமை
**(ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம் -நம்மாண்டவன் வ்யாக்யானத்திலிருந்து)**

**मणिपादुकयोर्युगं मुरारेर्मम नित्यं विदधातु मङ्गलानि ।**
**अधिकृत्य चराचरस्य रक्षामनुकम्पाक्षमयोरिवावतारः ।। 762**

**மணிபாதுகயோர்யுகம் முராரே: மம நித்யம் விததாது மங்களாநி|**
**அதிக்ருத்ய சராசரஸ்ய ரக்ஷாம் அநுகம்பா க்ஷமயோரிவாவதார:||**

(-) चराचरस्य चर அலி, अचर அசையாததான மரம் முதலானவைகளென்ன, இந்த இருவகையான உலகத்தினுடைய, ा - காப்பாற்றுதலை, अधिकृत्य உத்தேசித்து (அதாவது காப்பாற்றுவதற்காக). अनुकम्पा தயை என்ன,ாள்: பொறுமையென்ன இவைகளுடைய, अवतारः பிறப்பு போலிருக்கிற (இவையிரண்டும் உருவம் எடுத்து வந்தது போலிருக்கிற ) मुरारेः பெருமாளுடைய, பளகள்: கல்லிழைத்த பாதுகைகளுடைய, 474 - இரண்டானது, ஈஈ -எனக்கு, எப்பொழுதும்,ரி -இந்த லோகத்திலும் வேறு லோகத்திலும் க்ஷேமங்களை, -பண்ண வேண்டும்.

(கருத்து) உலகத்தைக் காப்பாற்றுவதற்கு தயை. பொறுமை இந்த இரண்டும் வேண்டும். இந்த இரண்டும் ஒன்றை விட்டு ஒன்று பிரியாது. பெருமாளுடைய இந்த இரண்டும் வடிவெடுத்து வந்தது போலிருக்கிறது. இந்த இரண்டு பாதுகைகள். இவைகள் எனக்கு இந்த லோகத்தில் குறைவில்லாத அளவற்ற உயர்ந்த ஸுகங்களையும், மோக்ஷ ஸுகத்தையும் கொடுக்க வேண்டும். ஆழ்வார் முதலான ஆசார்யர்கள் தயை, பொறுமை இவையிரண்டும் வடிவு எடுத்து வந்தது போலிருக்கிறார்கள். தயை என்பது ஒரு ஜீவன் வருத்தப்படுகிறபோது இன்னொருவனுக்கு காசு முதலான பிரயோஜனத்தில் ஆசையில்லாமல், அந்த வருத்தத்தைப் போக்க வேண்டும் என்கிற நினைவு.இந்த நினைவு கையாலாகாதவனுக்கு உண்டானால் அது துக்க ரூபமாக ஆகும். வருத்தத்தைப் போக்க வல்லவனுக்கு துக்கத்தைக் கொடுக்காது. ஜீவன்கள் துக்கப்படும்போது பெருமாள் துக்கப்படுகிறார் என்று சிலர் சொல்கிறார்கள். எல்லாவற்றையும் அறிந்து, எல்லாவற்றையும் நினைத்தபடி செய்யக் கூடிய பெருமாளுக்கு துக்கம் எப்படி வரும்? யாரும் இதைக் கவனிக்க வேண்டும்.

(இந்த ஸ்லோகம் ஸ்ரீ திருக்குடந்தை ஆண்டவனுக்கு அபிமதமான ஸ்லோகம். நமது ஸ்ரீ ரங்கநாத பாதுகா இதழ்களில் முதல் பக்கத்தில் காணலாம்.)

********************

# அஹங்காரம், மமகாரம் உள்ளவனாக இருத்தல் கூடாது

**அஹங்காரமின்றி இருந்த பாங்கு**: கீதையில் கண்ணன், **நிர்மமோ நிரஹங்கார**: -அஹங்காரம், மமகாரம் உள்ளவனாக இருத்தல் கூடாது என்று பல இடங்களில் உபதேசித்துள்ளார். **"பரச்சதம் வாபி பரஸ்ஸஹஸ்ரம் ஸ்ரீ வேங்கடாசார்ய க்ருதா: பிரபந்தா:"** என்றபடி ஸ்வாமி தேசிகன் இயற்றிய க்ரந்தங்கள் கணக்கிலடங்கா. ஆனால் இந்த க்ரந்தங்களை நான்தான் எழுதினேன்; இவை என்னுடைய க்ரந்தங்கள் என்று அஹங்கார, மமகாரத்துடன் கூறாமல்,

**"வெள்ளைப் பரிமுகர் தேசிகராய் விரகால் அடியோம்**
**உள்ளத்தெழுதியது ஓலையிலிட்டனம் யாம் ......"**

என்று அதிகாரஸங்க்ரஹத்தில் அநுஸந்தித்தார். இவற்றை நானாக எழுதவில்லை. ஸ்ரீஹயவதனப் பெருமாள் என் உள்ளத்தில் எழுதினார்; நான் அவற்றை ஓலையில் எழுதினேன், அவ்வளவே என்று பணிவுடன் பகர்கிறார். மேலும் அம்ருதாஸ்வாதினி இறுதிப் பாசுரத்தில்,

**காண்பனவும் உரைப்பனவும் மற்றொன்றி**
**.......................................................................**
**வேண்பெரிய விரிதிரைநீர் வையத்துள்ளே**
**வேதாந்த ஆரியன் என்று இயம்ப நின்றோம்**
**நாம் பெரியோம் அல்லோம் நாம் நன்றும் தீதும்**
**நமக்குரைப்பார் உளரென்று நாடுவோமே.**

என்று தன் அடக்கத்தை அறிவிக்கிறார். யாம் கடல் சூழ்ந்த இம்மண்ணுலகில் ஸ்ரீரங்கநாதப் பெருமாளே **"வேதாந்தாசார்யன்"** என்று புகழும்படியான பாக்யத்தைப் பெற்றிருந்தாலும், அதனால் அஹங்காரம் கொள்ளாமல் இப்படிப்பட்ட பெருமைக்கு **ஆசார்ய கடாக்ஷமே காரணம்** என்று எண்ணி மேலும் உயர்ந்த ஜ்ஞானம் அடைவதற்கு **ஆசார்யர்களை நாடி நிற்போம்** என்று அருள்கிறார். **இவ்வகையில் நாமும் அவ்வாறு அஹங்கார, மமகாரங்களை ஒழிக்க வேண்டும் என்று உணர்த்துகிறார்.**

**........ (ஸ்ரீரங்கநாத பாதுகா ...டிசம்பர் 2020 இதழிலிருந்து)**

*****************

# ஆசார்ய மஹிமை
# 35ம் பட்டம் அழகியசிங்கர்
## ஸ்ரீ ரங்கநாத சடகோப யதீந்திர மஹாதேசிகன்

- ஸ்ரீ அழகிய சிங்கர் கத்தவால் ஸமஸ்தானத்தில் ஸ்ரீஸீதாராம பூபால மஹாராஜாவால் ஆராதிக்கப் பெற்றுவரும் ஸமயத்தில், மஹாராஜாவின் கணையாழி ஒரு தரம் தன் அரண்மனையிலும், மற் றொரு தரம் ஸ்ரீகிருஷ்ணா நதியிலும் தவறி விழுந்து விட்டது. எவ்வளவு சிரமப்பட்டுத் தேடியும் அகப் படவில்லை. மஹாராஜாவும் ஸ்ரீ அழகியசிங்கரிடம் விஜ்ஞாபித்தார். ஸ்ரீ அழகியசிங்கரும் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் திருவடிகளில் பாரத்தைப் போட்டுவிட்டு பெருமாளை வெகுகாலம் தியாநித்து, இருக்கும் இடத்தை ஸாதிக்கவே, அதே இடத்தில் கணையாழி இருக்கக்கண்ட மஹாராஜரும் ப்ரீதிபுரஸ்ஸரமாக அக்கணையாழியின் விலையில் ஒரு பாகத்தை ஸ்ரீ அழகியசிங்கர் திருவடிகளில் ஸபர்ப்பித்தார்.

- காளயுக்தி ஆண்டு வைகாசித் திங்கள் கத்தவால் ஸமஸ்தாநத்தில் ஸ்ரீகேசவப் பெருமாளுக்கு ஸம்ப்ரோக்ஷண மஹோத்ஸவம் நடத்துவதாகத் தீர்மானித்து பூர்வாங்காங்கள் பூர்த்தியாயின. அத் தருணத்தில் திடீரென்று மஹாராஜாவின் ஜனக பிதாவான ஸ்ரீமான் பீமா ரெட்டியார் அவர்களுக்கு தேக அசௌக்கியம் ஏற்பட்டுவிட்டது. பிரதிஷ்டை நடக்காதுபோல் தோன்றிவிட்டது. வைத்தியர் களும் தைரியம் சொல்லவில்லை. மஹாராஜாவும் கலங்கிநின்றார். ஸ்ரீ அழகியசிங்கரும் மஹாராஜாவின் கலக்கத்தைக் கண்ணுற்று, ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹனைத் தியானித்து, தன் மந்த்ரப்ரபாவத்தால் அந்த பீமா ரெட்டியார் அவர்களின் தேஹத்தில் உள்ள பாதையை ஆகர்ஷித்து ஒரு வெள்ளித் தகட்டில் அதை நிறுத்தி, ரெட்டியார் அவர்களை ஸ்வஸ்தப்படுத்தி, ப்ரதிஷ்டா மகோத்ஸவத்தைக் கிரமமாய் நடத்திவைத்தார்.

- ஹைதராபாத்தில் ஒரு தனிகரான ஸ்ரீவைஷ்ணவர் ஒருவர், கொடூரமான வியாதியினால் பீடிக் கப்பட்டவராய், அந்நாஹாரம் முதலியவை இல்லாதவராயும் பிரக்ஞை இல்லாதவராயும் இருந்தார். எவ்வளவு பிரயாசைப்பட்டும் வைத்தியர்களால் குணப்படுத்த முடியவில்லை. அந்த ஸ்வாமியின் தர்ம பத்நீ, ஸ்ரீ அழகிய சிங்கர் பிரபாவத்தால் ஒருக்கால் தன் மங்கல்ய ஸம்ரக்ஷணம் ஏற்படும் என்று, ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்மன் திருவடிகளில் பாரத்தைப் போட்டுவிட்டு, ஸ்ரீ அழகிய சிங்கரை தண்டம் ஸமர்ப் பித்து வருவதாய், தன் புத்திரர்களிடம் சொல்லி

விட்டு, கத்தவால் வந்து ஸ்ரீ அழகிய சிங்கரை தண்டம் ஸமர்ப்பிவித்து விஷயத்தை விண்ணப்பித்தாள்.

➢

ஸ்ரீ அழகியசிங்கரும், பகவத்ஸந்நிதியில் அந்த ஸ்ரீ வைஷ்ணவரின் க்ஷேமத்தைப் பிரார்த்தித்து ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்மன் நியமனம் பெற்று, மந்த்ராக்ஷதையும், தீர்த்தத்தையும் அநுக்ரஹித்து அருளினார். உடனே அந்த உத்தமியும் தனக்கு மாங்கல்ய ஸம்ரக்ஷணம் ஏற்பட்டு விட்டதாய் நிச்சயித் துத் திரும்பிப் புறப்பட்டுவிட்டாள். ஸ்ரீ வைஷ்ணவருக்கும், ஸ்ரீ அழகிய சிங்கர் பிரார்த்தித்தமையத்தி லேயே தன் நினைவு வந்தது. 'தன்பத்நீ எங்கே?, என்று வினவினாராம். விஷயத்தை அறிந்து கொண்டதும் தனக்கு வியாதி குணமாகிவிட்டதாயும் எண்ணி, தன் தர்மபத்நீ கொண்டுவந்த தீர்த்தத்தைத்தானே வாங்கி ஸ்வீகரித்து, மந்த்ராக்ஷதையையும் தன் சிரஸ்ஸில் சேர்த்துக் கொண்டார். அந்த ஸ்ரீவைஷ்ணவர் இன்றைக்கும் அரோகத்ருடகாத்ர ராகவும், ஸம்பந்நராகவும் எழுந்தருளி இருக்கிறார். பெருமாளுக்கு நிறைய திரவியத்தைச் செலவு செய்து, அநேக நாட்கள் ஆராதித்தார். அவ்வுத்தம நங்கையும் தன்னுடைய கல் இழைத்த திருமங்கல்யத்தைத் தாயாருக்கு ஸமர்ப்பிவித்து உள் மகிழ்ந்தாள்.



# புருஷஸூக்தம்- ஸ்ருஷ்டி

எட்டு வாக்கியங்கள்:

சந்த்ரமா மனஸோ ஜாத: சக்ஷோஸ்ஸூர்யோ அஜாயத |
முகாத் இந்த்ரஸ் சாக்னிஸ்ச | ப்ராணாத் வாயுரஜாயத|
நாப்யா ஆஸீத் அந்தரிக்ஷம் | சீர்ஷ்ணோ த்யௌஸ் ஸமவர்த்தத |
பத்ப்யாம் பூமிர் திசஸ் ச்ரோத்ராத் | ததா லோகான் அகல்பயன் |

பொழிப்புரை:
- சந்திரன் மனதிலிருந்து தோன்றினான்.
- கண்ணிலிருந்து சூரியன் உண்டானான்.
- முகத்திலிருந்து இந்திரனும் அக்கினியும்.
- ப்ராணனிலிருந்து வாயு உண்டானான்.
- உந்தியிலிருந்து அந்தரிக்ஷம் தோன்றியது.
- தலையிலிருந்து த்யுலோகம் ஏற்பட்டது.
- கால்களிலிருந்து பூமி; திசைகள் காதிலிருந்து.

அவ்வாறாக உலகங்களை உண்டாக்கினர்.



ஸ்ருஷ்டி பற்றிய இந்த வேதக்கருத்து தேசிகஸூக்திகளிலும் பரிமளிக்கிறது ---.. தேவ நாயக பஞ்சாசத்தில் ஒரு ச்லோகம்:

வேதேஷூ நிர்ஜரபதே நிகிலேஷ்வதீதம்
வ்யாஸாதிபிர் பஹுமதம் தவ ஸூக்தமக்ர்யம் |
அங்காந்யமூனி பவதஸ் ஸுபகா ந்யதீதே
விச்வம் விபோ ஜனிதவந்தி விரிஞ்சபூர்வம் ||

பொழிப்புரை: விபுவே! தேவ நாதனே! எல்லா வேதங்களிலும் ஓதப்பட்டதாகவும், வ்யாஸர் முதலியோரால் கௌரவிக்கப் பட்டதாயும், உயர்ந்ததாயும் இருக்கிற உன்னுடைய ஸூக்தமானது (புருஷ ஸூக்தம் எனப்படுவது) உம்முடைய இந்த அழகான அவயவங்களை ஓதுகிறது; பிரமன் முதலாகப் பிரபஞ்சத்தைப் படைத்தவை இவை என்று.

*****************************************************************************************************

# பெருமாள் பிரசாதம்

**(உ.வே. வாசுதேவாச்சாரியார் ஸ்வாமியின் வ்யாசத்திலிருந்து)**

பெருமாளுக்கு திருவாராதனம் செய்தபின், அந்த பிரசாதத்தை எப்படி உபயோகப்படுத்த வேண்டும் ? இதுபற்றி ஸ்ரீதேசிகன் விரிவாக பல விஷயங்கள் அருளி உள்ளார். திருக்குடந்தை தேசிகன் அருளிய தொகுப்பு இது -

1. பெருமான் பிரசாதத்தை பாகங்களாகப் பிரித்து, விஷ்வக்சேனர் முதலியவர்களுக்கு அமுது செய்விக்கலாம்.

2. பெருமான் பிரசாதத்தை ஒரு பகுதியைப் பிரித்து வைச்வதேவம் அனுஷ்டானம் செய்து, அந்த சேஷத்தை நாம் உண்ண வேண்டும்.

3. பெருமான் பிரசாதத்தை ஆசார்யர்கள் பாகவதர்கள் முதலியவர்களுக்கு கொடுக்கலாம்.

4. பெருமான் பிரசாதத்தை பக்தர்கள் தவிர மற்றவருக்குக் கொடுக்கக் கூடாது.

5. பெருமான் பிரசாதத்தை எலி முதலிய ஐந்துகளுக்கு கொடுத்து வீணாக்கக் கூடாது.

6. ச்ராத்தம் செய்யும்போதும் பெருமான் பிரசாதத்தையே பித்ருக்களுக்கு ஹோமம் ஆகவும் அன்னம் ஆகவும் அர்ப்பணம் செய்ய வேண்டும்.

7. பெருமான் பிரசாதத்தை நம் இலையில் சாதிக்கும்போது, மீண்டும் ப்ரோக்ஷணம் செய்து அந்தர்யாமிக்கு நிவேதனம் செய்ய வேண்டும்.

8. பெருமான் பிரசாதத்தை நாம் உண்பதற்கு முன் ப்ராணாஹுதி செய்ய வேண்டும்; இதுவும் ஒரு ஆராதனம் ஆகும்.

9. பெருமான் பிரசாதத்தை நாம் உண்ணுவதும் கூட அந்தர்யாமியான பெருமானுக்கு ஒரு ஆராதனம்தான்! அந்த கௌரவத்துடன் உண்ண வேண்டும்.

10. பெருமான் பிரசாதம் அல்லாத வேறு எதையும் என்றும் எங்கும் நாம் உண்ணக் கூடாது.

இந்த விஷயங்களை ஸ்ரீதேசிகன் விரிவாக பல வசனங்களுடன் அருளியுள்ளார்; மேலும் பல விசாரங்கள் அருளியுள்ளார். அதனை நமக்கு ஏற்ற முறையில் திருக்குடந்தை தேசிகன் தொகுத்து அழகாக அருளியுள்ளார்!

*************